بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 47

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

23 ரபீவுல் அவ்வல் 1441 ஹிஜ்ரி கமரி 21 நுபுவ்வத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

21 நவம்பர் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

سَنُلْقِيْ فِيْ قُلُوْبِ الَّذِيْنَ كَفَرُوا الرُّعْبَ بِمَآ أَشْرَكُوْا بِاللّٰهِ مَا لَمْ يُنَزِّلْ بِهٖ سُلْطٰنًا ۚ وَمَأْوٰىهُمُ النَّارُ ۭ وَبِئْسَ مَثْوَى الظّٰلِمِيْنَ ۝

இணைவைப்பதற்கு எந்த ஆதாரமும் இறக்கப்படாத நிலையில் அவர்கள் அவனுக்கு இணை வைத்ததன் காரணமாக நிராகரிப்போரின் உள்ளங்களில் நிச்சயமாக நாம் அச்சத்தைப் போடுவோம். அவர்கள் தங்குமிடம் நெருப்பாகும். அநீதி இழைப்போரின் தங்குமிடம் மிகக் கெட்டதே. (3:152)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறையச்சத்திற்குப் பல படிகள் உள்ளன. ஆனால் உண்மையைத் தேட வேண்டும் என்ற எண்ணத்துடன் முதற்கட்ட படிகளை கலப்பற்றத் தன்மையுடன் கடந்து சென்றால் பிறகு இந்த உண்மை மற்றும் உண்மையைத் தேட வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக அவர் உயர் அந்தஸ்தைப் பெற்று விடுகின்றார்.அல்லாஹ் திருக்குர்ஆனில், இறையச்சமுடையவர்களின் துஆக்களை ஏற்றுக் கொள்வதாகக் கூறுகின்றான். இது அவனது வாக்குறுதியாகும். அவன் தனது வாக்குறுதியை மீறுவதில்லை**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து…

### நமது துஆக்கள் வீணாகுவதிலிருந்தும் காப்பாற்றுங்கள்

நமது துஆக்களை வீணாகுவதிலிருந்தும் காப்பாற்றுவது நமது நண்பர்கள் மீது கட்டாயமானதாக இருக்கின்றது. தவறான செயல்களின் விளைவுகளால் அவற்றின் வழியில் எந்தத் தடையும் உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அவர்கள் இறையச்சத்தின் வழியைக் கடைபிடிக்க வேண்டும். ஏனென்றால் இறையச்சத்தையே மார்க்கக் கட்டளைகளின் சுருக்கம் என்று கூறலாம்.

இறையச்சத்திற்குப் பல படிகள் உள்ளன. ஆனால் உண்மையைத் தேட வேண்டும் என்ற எண்ணத்துடன் முதற்கட்ட படிகளை கலப்பற்றத் தன்மையுடன் கடந்து சென்றால் பிறகு இந்த உண்மை மற்றும் உண்மையைத் தேட வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக அவர் உயர் அந்தஸ்தைப் பெற்று விடுகின்றார்.

அல்லாஹ் திருக்குர்ஆனில், இறையச்சமுடையவர்களின் துஆக்களை ஏற்றுக் கொள்வதாகக் கூறுகின்றான். இது அவனது வாக்குறுதியாகும். அவன் தனது வாக்குறுதியை மீறுவதில்லை… எனவே துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இறையச்சம் நிபந்தனையாக இருக்கும்போது, எந்த மனிதராவது கவனமற்றவராகவும், வழிதவறிச் சென்றவாறும் துஆ ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினால் அத்தகைய நபர் பேரிழந்தவரும், முட்டாளும் இல்லையா?

எனவே தங்களால் இயன்ற வரை அவர்களில் ஒவ்வொருவரும் இறையச்சத்தின் வழிகளில் அடியெடுத்து வைப்பது நமது ஜமாஅத்திற்குக் கட்டாயமானதாகும். அதன் மூலமாக அவர்கள் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதன் இன்பத்தையும், ஆனந்தத்தையும் பெற வேண்டும். அதன் மூலம் ஈமானும் அதிகரிக்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 92,93 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### காதியான் ஆண்டு மாநாடு தொடர்பான முக்கிய அறிவிப்பு

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் காதியான் ஆண்டு மாநாடு தொடர்பாக, இது 125 வது ஆண்டு மாநாடு என்று பத்ர் பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் சில குறிப்பான நிகழ்ச்சிகளுக்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். இது தொடர்பான தகவலை சுற்றறிக்கை மூலமாக ஜமாஅத்திற்கும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ''தாரீகே அஹ்மதிய்யத்'' காதியான் துறையின் ஆய்வின் அடிப்படையில், **2019 ஆம் ஆண்டு நடைபெறும் ஆண்டு மாநாடு 125 வது ஆண்டு மாநாடு அல்ல. மாறாக 126 வது ஆண்டு மாநாடாகும்** என்ற தகவல் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் மிகுந்த பரிவுடன் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேலும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள்.

(செயல் தலைவர், நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

நேர்மையை நேசிப்போம்
நேர்மையின்மையை வெறுப்போம்

இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**போர் ஆயுதங்களை அணிந்த பிறகு இறைவனது கட்டளையின்றி அதைக் கழற்றுவது இறைவனது நபிமார்களின் கண்ணியத்திற்கு மாற்றமானதாகும் (ஹதீஸ்)**

**எங்களது மார்க்கத்தில் ஏமாற்றுதலை நாங்கள் ஆகுமானதாக கருதுவதில்லை**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சம்ராவை தம்முடன் போரில் கலந்து வருவதற்கான அனுமதியை வழங்கினார்கள். எனவே அந்தச் சிறுவனின் உள்ளம் மகிழ்ச்சியடைந்தது**

**பத்ர் போரில் பங்கு பெற்ற கலப்பற்றத் தன்மையும், பற்றுணர்வும் கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் குபைப் பின் அதீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூல் (ரலி) ஆகியோரின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**கிலாஃபத்தின் மீது கலப்பற்ற அன்பு கொண்டிருந்த மதிப்பிற்குரிய காஜா ரஷீதுத்தீன் கமர் சாஹிப் அவர்களைப் பற்றிய நற்குறிப்பை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறியவாறு ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அன்னாரது ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஜெர்மனியிலுள்ள கீஸன் என்ற இடத்தில் 18 அக்டோபர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **அஹா** மாதம் **18 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் தொடரை எடுத்துக் கூறி வருகின்றேன். இன்றும் இதனை எடுத்துக் கூறுவேன். கடந்த சுற்றுப் பயணம் மற்றும் பல்வேறு ஆண்டு மாநாடுகளின் காரணமாக இத்தொடர் இடையில் விடுபட்டு விட்டது. சஹாபாக்கள் தொடர்பாக நான் இறுதியாக 20 செப்டம்பர் அன்று குத்பா கொடுத்திருந்தேன். அதில், ஹஸ்ரத் குபைப் பின் அதீ அவர்களைப் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அவர்களைப் பற்றிய சில குறிப்புகள் எடுத்துக் கூறுவதிலிருந்து விடுபட்டு விட்டது.

மேலும் அந்த குறிப்பில், அவர்களது ஷஹாதத் சந்தர்ப்பத்தின்போது, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு, எனது சலாத்தை எட்ட வைப்பாயாக என்று அல்லாஹ்விடம் அவர்கள் கூறியதும் எடுத்துக் கூறப்பட்டது.

எவ்வாறிருப்பினும் இந்த மக்கள் உயர் அந்தஸ்தைப் பெற்றிருந்தனர். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக் கூடியவர்களாக இருந்தனர்.

மேலும் அல்லாஹ்வும் இவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதும் தெரிய வருகின்றது. அதாவது அல்லாஹ்வைத் தவிர வேறு எங்களுக்கு எந்த வழியும் இல்லை. எனவே எனது ஸலாத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எட்ட வைப்பாயாக என்று அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாத்தையும் எட்ட வைத்து விட்டான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு சபையில் அமர்ந்திருந்தவாறு வ அலைக்கும் ஸலாம் என்றும் கூறினார்கள். மேலும் அன்னார் அந்த சஹாபாக்களிடம் இவர்களது ஷஹாதத் தொடர்பாகவும் எடுத்துக் கூறினார்கள்.

(ஃபதஹுல் பாரி, ஷரஹ் சஹீஹுல் புகாரி... தொகுதி 7 பக்கம் 488, கிதாபுல் மகாஸி ஹதீஸ் எண் 4086 – கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் குபைப் பின் அதீ மற்றும் அவர்களுடன் இருந்தவர்கள் ஷஹீதாக்கப்பட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் உமைய்யாவிடம், மக்கா செல்லுங்கள். இந்த அநீதியை இழைத்த அபூ சுஃப்யானைக் கொன்று விடுங்கள். இவருக்கு இதுவே தண்டனையாகும் என்று கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸஹர் அன்ஸாரி அவர்களையும் அவர்களுடன் அனுப்பினார்கள். இந்த இருவரும் தமது ஒட்டகத்தில் பயணம் செய்தவாறு மக்காவிலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள யாஜஜ் பள்ளத்தாக்கை சென்றடைந்தார்கள். மேலும் இரவு நேரத்தில் மக்காவில் நுழைந்தார்கள்.

ஹஸ்ரத் ஜப்பார் அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களிடம், நாம் கஃபாவை தவாஃப் செய்து இரண்டு ரக்அத்துகள் தொழுதால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் அவர்கள், குரைஷிகளின் நடைமுறை என்னவென்றால், அவர்கள் உணவு உண்ட பிறகு தமது முற்றத்தில் இரவு நேரத்தில் அமர்ந்திருப்பார்கள். நாம் பிடிபட்டு விடக்கூடாது என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் ஜப்பார் அவர்கள், இன்ஷா அல்லாஹ் அவ்வாறு ஒருபோதும் நடக்காது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு நாங்கள் தவாஃப் செய்தோம். மேலும் இரண்டு ரக்அத்துகள் தொழுதோம். பிறகு நாங்கள் அபூ சுஃப்யானை தேடிச் சென்றோம்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் நடந்து சென்று கொண்டிருக்கும்போது மக்காவைச் சேர்ந்த ஒருவர் எங்களைப் பார்த்தார். என்னை அவர் அடையாளங்கண்டு கொண்டார். மேலும் இவர் உமர் பின் உமைய்யாவே ஆவார். நிச்சயமாக ஏதாவதொரு தீய எண்ணத்தில்தான் இவர் வந்திருப்பார் என்று எங்களைப் பார்த்துக் கூறினார். எனவே நான் என்னுடன் வந்திருப்பவரிடம், தப்பித்து இங்கிருந்து வெளியேறுங்கள் என்று கூறினேன்.

பிறகு நாங்கள் அங்கிருந்து மிக வேகமாக வெளியேறினோம். எதுவரை என்றால் நாங்கள் ஒரு மலையின் உச்சியில் ஏறினோம். அந்த மக்களும் எங்களைத் தேடி வெளியேறினர். நாங்கள் மலை உச்சியில் ஏறியிருந்ததால் அவர்கள் கவலையடைந்தவாறு சென்று

விட்டனர். பிறகு நாங்கள் கீழே இறங்கி மலையின் குகையில் நுழைந்தோம். பிறகு கற்களை ஒன்று சேர்த்து மேலேயும் கீழேயும் வைத்தோம். மேலும் அங்கேயே நாங்கள் இரவைக் கழித்தோம். காலை விடிந்ததும் குரைஷிகளைச் சார்ந்த ஒருவர் அங்கு வந்தார். அவர் தமது குதிரையை அழைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். பிறகு மீண்டும் நாங்கள் குகைக்குள் ஒளிந்து கொண்டோம்.

எனவே நான், இவர் நம்மைப் பார்த்து விட்டால் நிச்சயமாக கூச்சலிடுவார். எனவே இவரைப் பிடித்துக் கொன்று விடுவதே சிறந்தது என்று கூறினேன்.

ஹஸ்ரத் உமர் கூறுகின்றார்கள்: என்னிடம் ஒரு கத்தி இருந்தது. அதை நான் அபூ சுஃப்யானைக் கொல்வதற்காகத் தயார் செய்திருந்தேன். நான் அந்தக் கத்தியினால் அந்த நபரின் நெஞ்சில் தாக்கினேன். எனவே அவர் எந்த அளவுக்கு உரத்த குரலில் கத்தினார் என்றால் மக்கா வாசிகள் அதை செவியுற்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் மீண்டும் எங்களது இடத்திற்கு வந்து ஒளிந்து கொண்டோம். மக்கத்து மக்கள் அந்த நபரிடம் மிக வேகமாக வந்தபோது, அவர் தமது இறுதி மூச்சை சுவாசித்துக் கொண்டிருந்தார். அவர்கள் அந்த நபரிடம், உம்மீது தாக்குதல் தொடுத்தது யார்? என்று கேட்டனர். அதற்கு அவர், உமர் பின் உமைய்யா என்று கூறினார். பிறகு அவர் அந்த இடத்திலேயே மரணித்து விட்டார். ஆனால் நாங்கள் இருந்த இடத்தை அவரால் கூற முடியவில்லை.

அந்தக் காலத்தில் இந்த நிலைமையே இருந்தது. அதாவது எதிரிகளுக்கு தெரிந்து விட்டால் பிறகு ஒருவர் மற்றொருவருடனான கடும் எதிர்ப்பின் காரணமாக அவர்களைக் கொன்று விடுவார்கள்.

மேலும் இவர்களுக்கு, இந்த நபர் நம்மைப் பார்த்து விட்டார். எனவே இவர் நம்மைப் பற்றி கூறி விடுவார். பிறகு நிராகரிப்பவர்கள் நம்மைப் பின் தொடர்வார்கள். நம்மையும் கொன்று விடுவார்கள் என்ற சந்தேகம் இருந்தது. எனவே அவர்கள் தற்காத்துக் கொள்வதற்காக இவ்வாறு செய்தார்கள்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த நபரால் நாங்கள் இருந்த இடத்தைக் கூற முடியவில்லை. அவரை தூக்கிக் கொண்டு சென்றனர். மாலை நேரத்தில் நான் என்னுடன் இருப்பவரிடம், இப்போதும் நாம் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று கூறினேன்.

எனவே நாங்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு இரவு நேரத்தில் ஒரு குழுவைக் கடந்தவாறு சென்றோம். அவர்கள் ஹஸ்ரத் குபைப் அவர்களின் உடலைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு நபர், ஹஸ்ரத் உமர் அவர்களைப் பார்த்து, இறைவன் மீது ஆணையாக! இந்த நபரது செயல்பாடுகள் உமர் பின் உமைய்யாவுக்கு ஒத்ததாக இருக்கின்றது. இன்று அவர் மதீனாவில் இருந்திக்கவில்லை என்றால் பிறகு இவரே உமர் பின் உமைய்யா என்று நான் கூறியிருப்பேன். இங்கும் அல்லாஹ் அவர்களது கண்களில் திரையிட்டு விட்டான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஜப்பார் அவர்கள் ஹஸ்ரத் குபைப் அவர்கள் தொங்கவிடப்பட்டிருந்த அந்த மரக்கட்டை வரை சென்று அதை விரைவாக எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள். பிறகு அந்த மக்களும் அவர்களுக்குப் பின்னால் ஓடினார்கள்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. அவர்கள் மதுபோதையில் இருந்தார்கள். சிலர் தூங்கிக் கொண்டிருந்தனர். சிலர் கண்விழித்திருந்தனர். எவ்வாறிருப்பினும் இவர்களால் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. மேலும் இவர்கள் வேகமாக எடுத்துக் கொண்டு ஓடினர். இறுதியில் ஹஸ்ரத் ஜப்பார் அவர்கள் யாஜஜ் மலையில் சேலாபீ என்ற பெயருடைய இடத்தை அடைந்த பிறகு அந்த கம்பை அவர்கள் அதற்குள் எரிந்து விட்டார்கள். பிறகு அந்த மக்களும் பின்னாலேயே வந்தடைந்தார்கள். ஆனால் அல்லாஹ் அந்த கம்பை அந்த நிராகரிப்பாளர்களின் கண்களிலிருந்து மறைத்து விட்டான். மேலும் அவர்களால் அதைத் தேடிப்பிடித்து கண்டு பிடிக்க முடியவில்லை.

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு நான் சென்றேன். மக்காவிலிருந்து 25 மைல் தொலைவிலுள்ள யஜ்னான் என்ற மலையைச் சென்றடைந்தேன். நான் ஒரு குகையில் தஞ்சம் புகுந்தேன். பிறகு அங்கிருந்து வெளியேறி மதீனாவிலிருந்து 78 மைல் தொலைவிலுள்ள அர்ஜ் என்ற இடத்தை சென்றடைந்தேன். பிறகு நான் சென்றவாறே மதீனாவிலிருந்து 60 மைல் தொலைவிலுள்ள நகீஹ் என்ற இடத்தை அடைந்தபோது குரைஷிகளின் இணை வைப்பவர்களைச் சேர்ந்த இருவர் என்னைப் பார்த்தனர்.

இந்த இருவரையும் மதீனாவில் உளவு பார்ப்பதற்காக குரைஷிகள் அனுப்பி இருந்தனர். நான் அவர்களிடம், ஆயுதங்களைக் கீழே போட்டு விடுங்கள். நீங்கள் உளவு பார்க்க வந்துள்ளீர்கள் என்பது தெரிந்து விட்டது என்று கூறினேன். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. எனவே அவர்களில் ஒருவருடன் அங்கேயே நான் சண்டையிட்டவாறு அவரைக் கொன்று விட்டேன். மற்றொருவரைக் கைதியாக்கி விட்டேன். பிறகு அவரைக் கட்டி மதீனாவிற்கு அழைத்து வந்தேன்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 885,886 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 2 பக்கம் 226 குபைப் பின் அதீ (ரலி) – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 225, 309 & தொகுதி 4 பக்கம் 400)

இன்னொரு அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் உமர் பின் உமைய்யா ஸம்ரி அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை மட்டுமே உளவு பார்க்க அனுப்பினார்கள். மேலும் ஹஸ்ரத் குபைப் அவர்களைக் கம்பிலிருந்து இறக்க வேண்டும் என்பதற்காக அனுப்பினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இரவு நேரத்தில் நான் ஹஸ்ரத் குபைப் அவர்களின் கம்புக்கு அருகில் சென்றேன். மேலும் அதற்கு மேல் ஏறினேன். அப்போது என்னை எவரும் பார்த்து விடக்கூடாது என்று நான் அஞ்சினேன். அந்த கம்பை நான் அவிழ்த்தபோது அது தரையில் விழுந்து விட்டது. பிறகு நான் பார்த்தேன். அந்த கம்பு மறைந்து விட்டது. அல்லது பூமி அதை விழுங்கி விட்டது. பிறகு அப்போதிருந்து இப்போது வரை குபைப் அவர்களின் மரக்கட்டை தொடர்பாக எவரும் கூறவில்லை.

(அஸதுல் காபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 1 பக்கம் 684 குபைப் பின் அதீ (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னொரு அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் உமர் பின் உமைய்யா ஸம்ரீ அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் குபைப் அவர்கள் கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்த்து அவர்களை அதிலிருந்து தனியாக எடுத்து கீழே கிடத்தினேன். நான் எனக்குப் பின்னால் ஒரு கால் ஓசையைக் கேட்டேன். நான் திரும்பிப் பார்த்தபோது எனக்கு

எதுவும் தென்படவில்லை. மேலும் ஹஸ்ரத் குபைப் அவர்களின் உடல் மறைந்து விட்டது.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 25 குபைப் பின் அதீ (ரலி) – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முதல் அறிவிப்பே சரியானதாக தெரிகின்றது. அதாவது ஒடிச்சென்றவாறு அவர்கள் நதியில் அதை எரிந்து விட்டார்கள். மேலும் நதி அதை இழுத்துச் சென்று விட்டது. பல்வேறு அறிவிப்புகள் வருகின்றன. எவ்வாறிருப்பினும் அவர்களின் உடல் பூமியில் மறைந்து விட்டது. அதை எவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை.

(அல்அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 2 பக்கம் 226 குபைப் பின் அதீ (ரலி) – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

நிராகரிப்பாளர்கள் அந்த உடலுடன் கண்ணியக் குறைவாக நடக்க முடியாமல் ஆயிற்று. அல்லாஹ் அதனைப் பாதுகாப்பாக வைத்தான்.

ஹஸ்ரத் குபைப் பின் அதீ அவர்கள் கைதியாக ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஓர் அறிவிப்பு இவ்வாறும் வருகின்றது. அதாவது மாவிய்யா ஹுஜைர் பின் அபூ யேஹாப் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமைப் பெண்ணின் வீட்டில்தான் ஹஸ்ரத் குபைப் அவர்கள் கைதியாக இருந்தார்கள். மாவிய்யா பிற்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அவர்கள் மிகச்சிறந்த முஸ்லிமாக நிரூபணமானார்கள்.

மாவிய்யா பிறகு இந்த சம்பவத்தை எடுத்துக் கூறினார்கள். அதாவது அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் குபைப் அவர்களைத் தவிர சிறந்த வேறு எவரையும் கண்டதில்லை. நான் அந்த வீட்டின் கதவிலிருந்து பார்ப்பேன். அவர்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டிருப்பார்கள். எனது அறிவிற்கேற்ப, அன்றைய நாட்களில் பூமியின் மேற்பரப்பில் உண்பதற்காக ஒரு திராட்சைப் பழம் கூட இருக்கவில்லை. இந்த பகுதியிலேயே எந்த திராட்சைப் பழமும் இருக்கவில்லை.

ஆனால் ஹஸ்ரத் குபைப் அவர்களின் கையில் ஒரு மனிதனின் தலைக்கு சமமாக திராட்சைப் பழத்தின் கொத்து இருந்தது. அதாவது பெரிய கொத்து ஒன்று இருந்தது. அதிலிருந்து அவர்கள் உண்டார்கள். அது அல்லாஹ்வின் ரிஸ்கே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஹஸ்ரத் குபைப் அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையில் திருக்குர்ஆன் ஓதுவார்கள். பெண்கள் அதைச் செவியுற்று அழுவார்கள். மேலும் அவர்களுக்கு ஹஸ்ரத் குபைப் அவர்களின் மீது கருணை ஏற்படும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் ஹஸ்ரத் குபைப் அவர்களிடம், குபைபே! உங்களுக்கு ஏதாவது தேவையுள்ளதா என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள், இல்லை. ஆனால் எனக்கு குளிர்ந்த தண்ணீரைத் தாருங்கள். மேலும் எனக்கு சிலைகளின் பெயரால் அறுக்கப்பட்ட இறைச்சியைக் கொடுக்காதீர்கள். நீங்கள் உண்ணுகின்ற உணவை ஒருபோதும் எனக்குக் கொடுக்காதீர்கள். மேலும் மூன்றாவது விஷயம் என்னவென்றால், என்னைக் கொல்வதற்காக மக்கள் எண்ணும்போது எனக்கு தெரிவித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு புனித மாதம் முடிந்த பிறகு ஹஸ்ரத் குபைப் அவர்களைக் கொலை செய்து விட வேண்டும் என்று மக்கள் எண்ணினர். நான் அவர்களிடம் சென்று, அவர்களுக்கு இந்த விஷயத்தைப் பற்றி கூறினேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் தாம் கொல்லப்படுகின்றோம் என்பதைக் குறித்து பொருட்படுத்தவேயில்லை. அவர்கள் என்னிடம், எனக்கு சவரக் கத்தியை கொடுத்து அனுப்புங்கள். அதன் மூலம் நான் என்னை சரிபடுத்திக் கொள்ளட்டும் என்று கூறினார்கள். நான் எனது மகனான அபூ ஹுஸைனின் கையில் சவரக் கத்தியை கொடுத்து அனுப்பினேன்.

இந்த மகன் அவர்களது உண்மையான மகன் அல்ல. மாறாக மாவிய்யா அவர்கள் இவர்களைப் பராமரித்து வந்தார்கள். இதுவே எழுதப்பட்டுள்ளது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனது மகன் சென்ற பிறகு எனது உள்ளத்தில் இந்த எண்ணம் வந்தது. அதாவது அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவரது கையில் சவரக் கத்தி உள்ளது. எனவே அவர் இதற்காகப் பழிவாங்குவார். நான் என்ன செய்து விட்டேன். நான் எனது மகனின் கையிலேயே சவரக் கத்தியைக் கொடுத்து அனுப்பி விட்டேனே. இவ்வாறு குபைப் அவர்கள் சவரக் கத்தியினால் எனது மகனைக் கொன்று விட்டு, ஆணுக்குப் பதிலாக ஆண் என்று கூறி விடுவாரே என்ற எண்ணம் வந்தது.

அறிவிப்பில் வருவது என்னவென்றால், அந்தக் குழந்தை விளையாடியவாறு அவர்களிடம் சென்றது. அவர்களது கையில் சவரக் கத்தி இருந்தது.


ஆனால் இன்னொரு அறிவிப்பு இவ்வாறு விரிவாக வருகின்றது. அதாவது அந்தக் குழந்தை நன்கு புரியும் திறன் கொண்டதாவும், அதன் கையில் எந்தப் பொருளையும் அனுப்பும் தகுதியைப் பெற்றிருந்ததாகவும் இருந்தது. எனவே அவர்கள் அதனைக் கொடுத்து அனுப்பினார்கள்.

மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்: அவன் சென்றால் குபைர் இவ்வாறு கூறி விடுவார். அதாவது நீங்கள் என்னைக் கொலை செய்கின்றீர்கள். எனவே நானும் இந்தக் கொலையைச் செய்து விடுகின்றேன் என்று கூறி விடுவார். பிறகு எனது மகன் சவரக் கத்தியை எடுத்துக் கொண்டு அவர்களிடம் சென்ற போது அவர்கள் நகைச்சுவையாக அந்த குழந்தையிடம், நீ மிகப்பெரிய தைரியசாலியாக இருக்கின்றாயே? உனது தாய்க்கு எனது நம்பிக்கை துரோகத்தைக் குறித்து அச்சம் இல்லையா? உனது கைகளில் சவரக் கத்தியைக் கொடுத்து அனுப்பியுள்ளார். ஆனால் நீங்களோ என்னைக் கொலை செய்ய நாடியுள்ளீர்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மாவிய்யா அவர்கள் கூறுகின்றார்கள்: குபைப் அவர்கள் கூறியவற்றை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் அவர்களிடம், குபைபே! அல்லாஹ்வின் அடைக்கலத்தின் காரணமாக நான் அச்சமின்றி இருக்கின்றேன். நான் நீங்கள் வணங்கக்கூடியவற்றின் மீது நம்பிக்கை கொண்டவாறு இந்த குழந்தையிடம் சவரக் கத்தியைக் கொடுத்து உங்களிடம் அனுப்பியுள்ளேன். எனது மகனைக் கொலை செய்து விட வேண்டும் என்பதற்காக நான் அவனை உங்களிடத்தில் அனுப்பவில்லை என்று கூறினேன்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

அதற்கு குபைப் அவர்கள், நான் இவனை ஒருபோதும் கொலை செய்ய மாட்டேன். நாங்கள் எங்களது மார்க்கத்தில் ஏமாற்றுதலை ஆகுமானதாகத் கருவதில்லை என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு நான் ஹஸ்ரத் குபைப் அவர்களிடம், மக்கள் உங்களைக் கொலை செய்வதற்காக காலையில் இங்கிருந்து அழைத்துக் கொண்டு செல்வார்கள் என்ற விஷயத்தை கூறினேன்.

சங்கிலியினால் கட்டப்பட்டிருந்த அவர்களை அடுத்த நாள் மக்கள், மக்காவிலிருந்து மதீனாவிற்கு செல்லக்கூடிய மூன்று மைல் தொலைவிலுள்ள தனீம் என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். மேலும் குபைப் அவர்கள் கொல்லப்படும் இந்த காட்சியைக் காண்பதற்காகக் குழந்தைகள், பெண்கள், அடிமைகள் மற்றும் மக்காவிலிருந்து அதிகமானோர் அங்கு வந்தனர். மேலும் இந்தக் கூற்றிற்கேற்ப எவருமே மக்காவில் இருக்கவில்லை என்று வந்துள்ளது.

போரில் கொல்லப்பட்ட தமது முன்னோர்களுக்காகப் பழிவாங்க வேண்டும் என்று விரும்பியவர்கள் தமது கண்களுக்கு குளிர்ச்சியூட்டுவதற்காகவும், மேலும் எவர்களுக்கு பழிவாங்க வேண்டாமோ ஆனால் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் எதிரிகளாக இருந்தார்களோ அவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியவாறு மகிழ்ச்சியடைவதற்காக அங்கு சென்று அவர்கள் எவ்வாறு கொல்லப்படுகின்றார்கள்? என்பதைப் பார்ப்போம் என்பதற்காக வந்தனர்.

பிறகு ஹஸ்ரத் குபைப் அவர்கள் ஸைது பின் தஸ்னாவுடன் தனீம் என்ற இடத்தைச் சென்றடைந்தார்கள். பிறகு இணை வைப்பவர்களின் கட்டளைக்கேற்ப, ஒரு பெரிய மரக்கட்டை வெட்டப்பட்டது. மேலும் குபைப் அவர்கள் அந்த கட்டைக் அருகில் சென்றதும், எனக்கு இரண்டு ரக்அத்துகளை தொழுவதற்கு வாய்ப்பு கிடைக்குமா? என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், சரி என்று கூறினார்கள். ஹஸ்ரத் குபைப் அவர்கள் இரண்டு ரக்அத்துகளை சுருக்கமாக தொழுதார்கள். தொழுகையை நீண்டதாகத் தொழவில்லை. ஆக இதுவே அந்த பெண் செய்த அறிவிப்பாகும்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 8 பக்கம் 399 மாவிய்யா மவ்லா ஹுஜைர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஹாது... ஹதீஸ் எண் 3045 & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 683 அடிக்குறிப்பு – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்னு சஅது அவர்கள் தொடர்பாக எந்த அறிவிப்புகளெல்லாம் எடுத்துக் கூறப்பட்டுள்ளதோ அதற்கேற்ப மாவிய்யா அவர்கள் ஜுஹைர் பின் அபூ யேஹாப் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமைப் பெண் ஆவார்கள். இவர்களது வீட்டில்தான் ஹஸ்ரத் குபைப் அவர்கள் கைதியாக இருந்தார்கள்.

அல்லாமா இப்னு அப்துல் பர் அவர்களின் கூற்றிற்கேற்ப, ஹஸ்ரத் குபைப் அவர்கள் உக்பாவின் வீட்டில் கைதியாக இருந்தார்கள். மேலும் உக்பாவின் மனைவியே அன்னாருக்கு உணவிற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தார்கள். மேலும் உணவு உண்ணும் நேரத்தில் அவர்கள் ஹஸ்ரத் குபைப் அவர்களை விடுவித்து விடுவார்கள்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 25 குபைப் பின் அதீ – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு அஸீர் அவர்கள் எழுதுகின்றார்கள்: அல்லாஹ்வின் வழியில் சிலுவையில் கொல்லப்பட்டவர் அன்னார்தான். அதாவது முதலில் கட்டை பூமியில் நடப்பட்டது. பிறகு அதில் அன்னார் அதில் தொங்க விடப்பட்டு ஷஹீதானார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 683 அடிக்குறிப்பு – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்தக் கொலை சம்பவம் தொடர்பாக எழுதுகின்றார்கள்: இந்தக் காட்சியை காண்பதற்காக மக்கத்து தலைவனான அபூ சுஃப்யானும் வந்திருந்தான். அவன் ஸைது அவர்களைப் பார்த்து, முஹம்மது (ஸல்) உங்களிடத்திலும், நீங்கள் உங்களது வீட்டில் நிம்மதியாக இருப்பதையும் நீங்கள் விரும்பவில்லையா? என்று கேட்டான்.

அதற்கு ஸைது அவர்கள் கடுங்கோபத்துடன், அபூ சுஃப்யானே! நீர் என்ன கூறுகின்றீர். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் முற்கள் குத்துவதைக் காட்டிலும் நான் மரணிப்பதே சிறந்ததாகும் என்று கூறினார்கள்.

இந்த பற்றுணர்வின் வெளிப்பாட்டின் காரணமாக அபூ சுஃப்யான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகாமல் இருக்க முடியவில்லை. அவன் மிகவும் வியப்புடன் ஸைது அவர்களைப் பார்த்தான். மேலும் குரலைத் தாழ்த்தியவாறு ஸைது அவர்களிடம், எவ்வாறு முஹம்மதுடன், முஹம்மதின் தோழர்கள் அன்பு கொண்டுள்ளார்களோ, அதேபோன்ற அன்பை வேறு எவரும் எவர்மீதும் செய்ததாக நான் கண்டதில்லை என்பதற்கு இறைவனே சாட்சியாவான்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 262–263)

ஆக இதுவே சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்மீது கொண்டிருந்த அன்பு, பற்றுணர்வு மற்றும் உயிரை தியாகம் செய்யும் தரமாகும். பிறகு அல்லாஹ் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதும் வெளிப்பட்டு விட்டது. இறைவனது வழியில் கொல்லப்படும்போது, அவர்களின் தரம் என்னவாக இருந்தது? எந்தப் பக்கத்தில் விழுந்தாலும் எனக்கு ஒன்றுமல்ல. வலப்பக்கமோ, இடப்பக்கமோ, முன்னால் விழுந்தாலோ, பின்னால் விழுந்தாலோ நான் இறைவனுக்காக உயிரைத் தியாகம் செய்கின்றேன் என்ற உணர்வு அவர்களிடம் இருந்தது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 683 அடிக்குறிப்பு – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவர்களிடம் இருந்த ஆசையை அவர்கள் கொல்லப்படுவதற்கு முன்பாக வெளிப்படுத்திக் காட்டினார்கள். அதுவும் அல்லாஹ்வுக்கு

## திருக்குர்ஆனிலிருந்து...

தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும் மறுமை நாளிடத்தும் நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷய்த்தானின் கூட்டாளியாவார்). ஷய்த்தானைத் தங்களின் கூட்டாளியாகக் கொண்டவர்கள், அவன் மிகத் தீய கூட்டாளி (என்பதை நினைவில் கொள்ளட்டும்). (4:39)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

முன்பாக சஜ்தா செய்ய வேண்டும். இரண்டு ரக்அத் நஃபில் தொழ வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாத்தை எட்ட வைப்பதற்கான ஆசை அவர்களிடம் இருந்தது. அதனை அல்லாஹ்வும் நிறைவேற்றினான். ஸலாத்தையும் எட்ட வைத்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவுக்கு அவர்களுக்கு அன்பு இருந்தது என்றால், அன்னாரது பாதங்களில் முற்கள் குத்துவதைக் கூட அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகத் தம்மையே அவர்கள் அர்ப்பணித்தார்கள். தமது உயிரைப் பற்றி எந்த கவலையும் கொள்ளவில்லை. இவர்களே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடிய மக்களாகத் திகழ்ந்தனர்.

அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூல் ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ அவ்ஃப் கிளையைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூல் அவர்களின் மகனாவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகவும் கலப்பற்ற சஹாபி ஆவார்கள். அன்னாரின் தாயாரின் பெயர் ஹவ்லா பின் முன்ஸிர் ஆகும்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 468 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 408 அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அறியாமைக் காலத்தின் அன்னாரது பெயர் குப்பாப் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது பெயரை மாற்றி அப்துல்லாஹ் என்று வைத்தார்கள்.

மேலும் கூறினார்கள்: குப்பாப் ஷய்த்தானின் பெயராகும். நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் அபீ சலூலின் பாட்டனாரின் பெயர் சலூல் ஆகும். அவர் ஹஸாஆ கோத்திரத்தைச் சார்ந்தவர். அப்துல்லாஹ் பின் அபி பின் சலூல், அபூ ஆமிர் ரஹபின் சிற்றன்னையின் மகனாவார். அபூ ஆமிர் யார் என்றால், இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகை தொடர்பாக மக்களிடம், ஒரு நபி வர விருக்கின்றார் என்றும் அந்த நபியின் மீது ஈமான் கொள்வது தொடர்பாகவும் எடுத்துக் கூறி வந்தார். அன்னாரது வெளிப்பாடு தொடர்பாக மக்களிடம் அவர் வெளிப்பட உள்ளார் என்று வாக்குறுதி வழங்கி வந்தார்.

அபூ ஆமிர் அறியாமைக் காலத்தில் தடித்த ஆடைகளை அணிந்து வந்தார். துறவறத்தை மேற்கொண்டிருந்தார். அல்லாஹ் தனது தூதர் (ஸல்) அவர்களை அனுப்பியபோது இவர் முகம் திருப்பி விட்டார். மேலும் பொறாமையில் மூழ்கியவாறு கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார். மேலும் நிரகாரிப்பிலேயே நிலைத்து நின்றார். இணை வைப்பவர்களுடன் இணைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போர் செய்வதற்காக வெளியேறினார். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவரது பெயரை ஃபாஸிக் என்று வைத்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 408,409 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ்வின் பிள்ளைகளில் உபாதா, ஜலீஹா, ஹைஸ்மா மற்றும் ஹவ்லி மற்றும் அமாமா ஆகியோரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அன்னார் கண்ணியமிக்க சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பத்ர், உஹது மற்றும் ஏனைய அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். அன்னார் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ்விடமிருந்து ஹதீஸை அறிவித்துள்ளார்கள். அன்னாருக்கு வஹீயை எழுதும் நற்பாக்கியமும் கிடைத்துள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 409 – 1990 ஆம் ஆண்டு தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 425 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. உஹது போரில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் மூக்கு வெட்டப்பட்டு விட்டது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களிடம் தங்கத்தாலான மூக்கை வைக்குமாறு கூறியதாக வருகிறது.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. உஹது போரின் சந்தர்ப்பத்தில் அன்னாரது இரண்டு பற்கள் உடைந்து விட்டன. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கத்தாலான பற்களை வைக்குமாறு அன்னாரிடம் கூறினார்கள்.

அறிவிப்பளார் அறிவிக்கின்றார்: பற்கள் தொடர்பான அறிவிப்பே சரியானதும், மிகவும் பிரசித்து பெற்றதும் ஆகும்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 298 அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் – 2008 ஆம் ஆண்டு தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மேலும் இதுவே சரியாகத் தோன்றுகிறது. அறிவிக்கக்கூடிய சிலர் சில நேரங்களில் மிகைப்படுத்திக் கூறி விடுகின்றனர். அல்லது சரியான செய்தியை அவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் போய் விடுகிறது. எவ்வாறிருப்பினும் பற்கள் உடைந்து விட்ட அறிவிப்பே சரியானதாக தெரிகிறது.

பெருமானார் (ஸல்)அவர்கள் கூறினார்கள்: தங்கத்தாலான பற்களை வைத்துக் கொள்ளுங்கள். எனவே அவர்கள் அதனை வைத்து வந்தார்கள். அந்த காலத்தில் க்ரவ்ன் (crown) வைத்து வந்தார்கள்.

உஹது போரில் அபூ சுஃப்யான் முஸ்லிம்களிடம், அடுத்த வருடம் நாம் மீண்டும் பத்ர் மைதானத்தில் சந்திப்போம் என்று அறைகூவல் விடுத்தான். இந்த சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு சீரத் காத்தமுன் நபிய்யீனில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் பல்வேறு வரலாற்றிலிருந்து கருத்துக்களை எடுத்தவாறு இந்த முடிவை எட்டியுள்ளார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் அமானத்துகளை (நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை) அவற்றிற்குத் தகுதியானவர்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்றும், நீங்கள் மக்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கும்போது நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். (4:59)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

அதாவது உஹது மைதானத்திலிருந்து திரும்பியபோது அபூசுஃப்யான் முஸ்லிம்களிடம், அடுத்த வருடம் பத்ர் மைதானத்தில் எங்களுக்கும் உங்களுக்கும் போர் நடைபெறும் என்று அறைகூவல் விடுத்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார்கள். எனவே அடுத்த வருடம் ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதத்தின் இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் 1500 சஹாபாக்களுடன் மதீனாவிலிருந்து வெளியேறினார்கள்.

மேலும் தமக்குப் பின்னால் அப்துல்லாஹ் அவர்களை மதீனாவின் அமீராக நியமித்தார்கள். மற்றொரு புறம் அபூ சுஃப்யான் பின் ஹரபும் குரைஷிகளைச் சார்ந்த 2000 போர் படையுடன் மக்காவிலிருந்து வெளியேறினான். ஆனால் உஹது போரில் வெற்றி பெற்றிருந்தும், இவ்வளவு பெரிய கூட்டத்தைக் கொண்டிருந்தபோதிலும் அவனது உள்ளம் அஞ்சியது.

இஸ்லாத்தை அழிக்க வேண்டும் என்று அவன் நாடியிருந்தும், எப்போது வரை மிகப்பெரிய கூட்டத்தை ஒன்றுகூட்டவில்லையோ அப்போது வரை முஸ்லிம்களுக்கு எதிராக போர் செய்வதற்கு செல்லக்கூடாது என்றே அவன் விரும்பினான். அவன் மக்காவில் இருந்தவாறே, நயீம் என்ற பெயருடைய ஒருவனை மதீனாவை நோக்கி அனுப்பி வைத்தவாறு, எப்படியவாறு முஸ்லிம்களை அச்சுறுத்தி, உண்மை மற்றும் பொய்யான விஷயங்களை எடுத்துக் கூறி போருக்காக வருவதிலிருந்து தடுத்து நிறுத்தி விடுமாறும் அவனுக்கு கட்டளையிட்டிருந்தான்.

எனவே அந்த நபர் மதீனாவிற்கு வந்தார். குரைஷிகள் போருக்காக ஆயத்தம் ஆகுவது மற்றும் அவர்களின் ஆற்றல் மற்றும் அவர்களிடம் காணப்படும் உணர்வுகள் தொடர்பாக பொய்யான கதைகளைக் கூறி மதீனாவில் ஒரு அமைதியற்ற நிலைமையை ஏற்படுத்தினான். எதுவரை என்றால் சில பலவீனமான இயல்பைக் கொண்ட மக்கள் இந்த போரில் கலந்து கொள்ள அஞ்சினர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்காப் புறப்படுமாறு கூறினார்கள்.

மேலும் அன்னார் தமது சொற்பொழிவில் கூறினார்கள்: நாம் நிராகரிப்பவர்களின் அறைகூவலை ஏற்றுக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தின்போது புறப்படுவதாக வாக்குறுதி அளித்துள்ளோம். எனவே நாம் இதிலிருந்து பின்வாங்க முடியாது. நாம் இதற்கு மாற்றமாக செயல்பட மாட்டோம். நீங்கள் அஞ்சுகின்றீர்கள் என்றால் நான் தனியாகச் செல்ல நேரிட்டாலும் நான் செல்வேன். மேலும் எதிரிகளுக்கு எதிரில் தனியாக நெஞ்சை நிமிர்த்தியவாறு நிற்பேன் என்று கூறினார்கள். இந்த விஷயங்களைக் கேட்டு மக்களின் அச்சம் நீங்கியது. அவர்கள் மிகவும் துடிப்புடனும், கலப்பற்ற முறையிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இணைந்து புறப்படுவதற்காக ஆயத்தமாகினர்.

எவ்வாறிருப்பினும் பெருமானார் (ஸல்) அவர்கள் 1500 சஹாபாக்களுடன் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். மற்றொரு புறம், அபூ சுஃப்யான் தமது 2000 போர் வீரர்களுடன் மக்காவிலிருந்து வெளியேறினான். ஆனால் இறைவனது திட்டம் இவ்வாறு நடந்தது. அதாவது வாக்குறுதிக்கேற்ப முஸ்லிம்கள் பத்ர் மைதானத்தை வந்தடைந்தனர். ஆனால் குரைஷிகளின் படை சிறிது தூரம் வரை வந்த பிறகு மீண்டும் திரும்பி மக்கா சென்று விட்டது.

இது எவ்வாறு நடைபெற்றது என்றால், முஸ்லிம்களை அச்சுறுத்துவதற்காக தான் அனுப்பிய நயீம் என்பவன் தோற்று விட்டான்; மேலும் முஸ்லிம்கள் அஞ்சவில்லை; மேலும் புறப்பட்டு விட்டனர் என்ற செய்தி அபூ சுஃப்யானிற்கு தெரிய வந்ததும் அவன் அஞ்சினான். மேலும் தமது படையைச் சார்ந்தவர்களிடம், இந்த வருடம் அதிகமாக பஞ்சம் ஏற்பட்டுள்ளது. மேலும் மக்களும் நெருக்கடியில் உள்ளனர். எனவே இந்த நேரத்தில் சண்டையிடுவதும் சரியானதாக இருக்காது. செல்வ செழிப்பான நிலை ஏற்படும்போது, நிலைமைகள் சரியாகும்போது அதிகமான ஆயத்தங்களுடன் மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்கலாம் என்று கூறி படையினரைத் திருப்பி அழைத்துச் சென்று விட்டான்.

எவ்வாறிருப்பினும் இஸ்லாமிய படை எட்டு நாட்கள் வரை பத்ர் மைதானத்தில் தங்கியது. அந்த இடத்தில் துல் கஃதா மாதத்தில் ஒவ்வொரு ஆண்டும் திருவிழா நடக்கும். இந்தத் திருவிழாவில் அதிகமான சஹாபாக்கள் கலந்து கொண்டனர். இந்தத் திருவிழாவின் மூலம் அவர்கள் வியாபாரம் செய்து அதிகமான லாபத்தை அடைந்தனர்.

இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது அவர்கள் அங்கு தங்கியிருந்த 8 நாட்களில் அவர்கள் தமது பொருட்களை இரண்டு மடங்காக ஆக்கிக் கொண்டனர். அவர்களிடம் இருந்த பொருட்கள் இரண்டு மடங்காக ஆகி விட்டது. திருவிழா முடிந்தபோது குரைஷிகளின் படையும் வராததினால் பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்திலிருந்து திரும்பிச் சென்றார்கள். மேலும் குரைஷிகள் மக்காவிற்குச் சென்று மீண்டும் மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க ஆயத்தமாகினர். இந்தப் போர் பத்ருல் மவ்இது என்று கூறப்படுகிறது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 529,530)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் யமாமா போரில் ஷஹீதானார்கள்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 72 அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் அன்ஸாரி – 2010 ஆம் ஆண்டு தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தந்தையான அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூல் அவர்கள் தொடர்பாக வருகின்றது. இந்த அறிவிப்புகளை நான் எடுத்துக் கூறுவதன் நோக்கம் நேரடியாக அவற்றிற்குத் தொடர்பு இல்லையென்றாலும் வரலாறு தொடர்பாகத் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு கழுதையில் பயணம் செய்தார்கள். அதில் துணி போடப்பட்டிருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது அவர்களை தமக்குப் பின்னால் அமர்த்திக் கொண்டார்கள். அன்னார் பனூ ஹாரிஸ் பின் ஹஸ்ரஜின் பகுதியில் வசித்து வந்த ஹஸ்ரத் சஅது பின் உபாதா அவர்களை நலம் விசாரிப்பதற்காகச் சென்று கொண்டிருந்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக அல்லாஹ் (யாருக்கும்) ஓர் அணுவளவு கூட அநீதி இழைக்க மாட்டான். அது நற்செயலாக இருக்குமாயின் அவன் அதனை அதிகமாக்கித்தன்னிடமிருந்து மாபெரும் நற்பலனை வழங்குவான். (4:41)

Faizal Hameed Ilahi, Tittacherry

இந்தச் சம்பவம் பத்ர் போர் நடைபெறுவதற்கு முன்பு நடந்ததாகும். ஹஸ்ரத் உஸாமா கூறி வந்தார்கள்: சென்று கொண்டிருக்கையில் நாங்கள் அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூல் அமர்ந்திருந்த ஒரு சபையை கடந்து சென்றோம். அந்த சபையில் சில இணை வைப்பவர்களும் இருந்தனர். சில யூதர்களும் இருந்தனர். சில முஸ்லிம்களும் அமர்ந்திருந்தனர். இந்த அனைவரும் ஒருவர் மற்றொருவருடன் இணைந்திருந்தனர். இந்த சபையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களும் இருந்தார்கள்.

இந்த விலங்கின் பார்வை இந்த சபையின் மீது விழுந்தது. எனவே அப்துல்லாஹ் பின் அபீ சலூல் தமது மூக்கை உயர்த்தியவாறு பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து, எங்கள் பக்கம் உங்களது கவனம் செலுத்தாதீர்கள் என்று கூறினார். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் சலாம் கூறி அங்கு தங்கினார்கள். அன்னார் அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார்கள். அவர்களுக்குத் திருக்குர்ஆனைப் படித்துக் காட்டினார்கள்.

அப்துல்லாஹ் பின் அபீ சலூல் கூறினான்: நீங்கள் கூறுவதை விட மிகச் சிறந்த நல்ல விஷயம் கிடையாது. சரிதான். மேலும் உங்களது பார்வையில் இதைவிட மிகச்சிறந்த கூற்று வேறு ஒன்றும் இல்லைதான்.

அதாவது அவன் கூறியதற்கு பல பொருட்கள் இருக்கலாம். எவ்வாறிருப்பினும் மொழிபெயர்ப்பு எவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்பதை உண்மையான சான்றைப் பார்த்தால் தெரிய வரும்.

எவ்வாறிருப்பினும் அவன் கூறினான்: உங்களிடம் எவர் வருகின்றாரோ அவரிடம் நீங்கள் இதனை எடுத்துக் கூறுங்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்கள் இதனைக் கேட்டு விட்டு, இல்லை; நபிகள் நாயகமே! எங்களது இந்த சபைகளிலேயே தாங்கள் வந்து எங்களுக்குப் படித்துக் காட்டுங்கள். எங்களுக்கு இந்த விஷயங்கள் மிகவும் பிடித்துள்ளது என்று கூறினார்கள்.

இதைக் கேட்டு முஸ்லிம்கள், இணை வைப்பவர்கள், யூதர்கள் ஆகியோர் ஒருவர் மற்றொருவரை ஏசிப் பேசினர். எதுவரை என்றால் ஒருவர் மற்றொருவர் மீது தாக்குதல் தொடுத்திருக்கலாம். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களது உணர்வுகளை கட்டுப்படுத்துமாறு அவர்களுக்குப் புரிய வைத்தார்கள். இறுதியில் அவர்கள் நின்று விட்டனர். இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தமது விலங்கின் மீது பயணம் செய்தவாறு சென்று விட்டார்கள். எதுவரை என்றால் ஹஸ்ரத் சஅது பின் உபாதா அவர்களிடம் வந்தடைந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சஅதே! அபூ குப்பாப் இன்று என்னிடம் கூறியதை நீர் செவியேற்கவில்லையா? அன்னார் அப்துல்லாஹ் பின் அபீயைப் பற்றி இவ்வாறு கூறினார்கள்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர் என்னைப் பற்றி இவ்வாறெல்லாம் கூறினார். அனைத்து விஷயங்களையும் அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் சஅது பின் உபாதா அவர்கள் கூறினார்கள்: யா ரஸூலல்லாஹ் (ஸல்), நீங்கள் அவர்களை மன்னித்து விடுங்கள். அவர்களை கண்டும் காணாமல் விட்டு விடுங்கள். உங்கள் மீது வேதத்தை அருளிய அந்த இருப்பின் மீது ஆணையாக! அல்லாஹ் தற்போது அந்த உண்மையை இங்கு கொண்டு வந்துள்ளான். அதனை அவன் உங்கள் மீது அருளியுள்ளான். இந்த நகரத்தைச் சார்ந்தவர்கள், அப்துல்லாஹ் பின் உபை அவர்களுக்கு தலைவருக்கான கிரீடத்தை அணிவித்து அவரது தலையில் தலைப்பாகையை கட்ட முடிவெடுத்திருந்தனர். ஆனால் அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள இந்த உண்மையின் காரணமாக இதனை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அவர்கள் பொறாமையின் நெருப்பில் எரிந்தனர். எனவேதான் அவர் இவ்வாறெல்லாம் கூறியதை நீங்கள் கேட்டீர்கள்.

இவை அனைத்தையும் பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டு அவர்களை மன்னித்தார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களும், அன்னாரது சஹாபாக்களும் இணை வைப்பவர்களுடனும் வேதத்தைச் சார்ந்தவர்களுடனும் அல்லாஹ் கட்டளையிட்டது போன்றே மன்னிப்புடன் நடந்து கொண்டனர். மேலும் அவர்கள் இழைத்த துன்பங்களைப் பொறுத்துக் கொண்டார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَتَسْمَعُنَّ مِنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ وَمِنَ الَّذِيْنَ اَشْرَكُوْٓا اَذًى كَثِيْرًا ؕ

அதாவது உங்களுக்கு முன்னர் வேதம் வழங்கப்பெற்றவர்களிடமிருந்தும், இணை வைப்பவர்களிடமிருந்தும் துயரம் தரக்கூடியவற்றை நிச்சயமாக நீங்கள் கேட்பீர்கள். (3:187)

وَدَّ كَثِيْرٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ لَوْ يَرُدُّوْنَكُمْ مِّنْۢ بَعْدِ اِيْمَانِكُمْ كُفَّارًا ۖۚ
حَسَدًا مِّنْ عِنْدِ اَنْفُسِهِمْ

வேதம் வழங்கப் பெற்றவர்களுள் பெரும்பாலார், தங்களுக்கு உண்மை தெளிவாகத் தெரிந்த பின்னர் தங்களிடமுள்ள பொறாமையினால், நீங்கள் நம்பிக்கை கொண்ட பிறகு உங்களை மீண்டும் நிராகரிப்பவர்களாக மாற்ற விரும்புகின்றனர். எனவே அல்லாஹ் தனது கட்டளையை இறக்கும் வரை நீங்கள் (அவர்களை) மன்னித்து, கண்டும் காணாதது போன்று நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் முழு ஆற்றல் பெற்றவன். (2:110)

மேலும் அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய கட்டளைக்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்கள் மன்னிப்பதையே சரி என்று கருதி வந்தார்கள். இறுதியில் அல்லாஹ் அன்னாருக்கு அனுமதி வழங்கினான். பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்தில் அவர்களை எதிர்த்துப் போரிட்டார்கள். அல்லாஹ் இந்தப் போரில் குரைஷிகளின் நிராகரிப்பாளர்களில் பெரிய பெரிய தலைவர்களைக் கொன்றான். எனவே அப்துல்லாஹ் பின் அபி பின் சலூல் மற்றும் அவனுடன் இருந்த இணை வைக்கக்கூடிய, சிலைகளை வணங்கக்கூடியவர்கள், இப்போது இந்த அமைப்பு மகத்தானதாக ஆகிவிட்டது என்று கூறினர். எனவே அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இஸ்லாத்தில் நிலைத்து நிற்பதாக பைஅத் செய்தனர்.மேலும் முஸ்லிமாகினர்.

(சஹீஹுல் புகாரி கிதாபுத் தஃப்ஸீர்... ஹதீஸ் எண் 4566)

அவர்கள் ஏற்றுக் கொண்ட இஸ்லாமும் கூட எத்தகையது என்றால், பத்ர் போரில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. எனவே அவர்கள் அஞ்சியவாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் ஒரு சாட்சியைக் கொண்டு வரும்போதும், உம்மை அவர்களுக்குச் சாட்சியாகக் கொண்டு வரும்போதும் அவர்களின் நிலை எவ்வாறிருக்கும்? (4:42)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

எவ்வாறிருப்பினும் நான் எடுத்துக் கூறிய இந்த அறிவிப்புகளுடன் இவர்களுக்கு நேரடியாக எவ்வித தொடர்பும் இல்லையென்றாலும், வரலாறு தொடர்பாக தெரிய வேண்டும் என்பதற்காகவே இதனை நான் எடுத்துக் கூறுகின்றேன். இதற்குப் பிறகு அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூலின் நடவடிக்கைகள் தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

அதாவது உஹது போர் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை ஒன்றுகூட்டி அவர்களிடம் குரைஷிகளுடனான இந்த தாக்குதல் தொடர்பாக ஆலோசனை செய்தார்கள். அதாவது மதீனாவிலேயே தங்கி விடலாமா? அல்லது வெளியே சென்று போர் செய்யவா? என்று ஆலோசனை செய்தார்கள். இதில் அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூலும் இருந்தான். இவன் உண்மையில் நயவஞ்சகனாக இருந்தான். ஆனால் பத்ர் போருக்குப் பிறகு வெளிப்படுத்திக் காட்டுவதற்காக முஸ்லிமாக மாறி இருந்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் அவனை ஆலோசனையில் பங்கு பெறச் செய்தது இதுவே முதல் முறையாகும்.

ஆலோசனைக்கு முன்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் குரைஷிகளின் தாக்குதல், அவர்களின் கொலை செய்யும் எண்ணம் தொடர்பாக எடுத்துக் கூறினார்கள். மேலும் கூறினார்கள்: இன்று இரவு கனவில் நான் ஒரு மாட்டைப் பார்த்தேன். மேலும் நான் பார்த்தேன். எனது வாளின் முனை உடைந்து விட்டது. பிறகு நான் பார்த்தேன். அந்த மாடு அறுக்கப்படுகிறது. பிறகு நான் பார்த்தேன். நான் எனது கையை ஒரு வலுவான மற்றும் பாதுகாப்பான கவசத்திற்குள் வைத்துள்ளேன்.

இன்னொரு அறிவிப்பில் இதுவும் வந்துள்ளது. அதாவது அன்னார் கூறினார்கள்: நான் செம்மறி ஆட்டைப் பார்த்தேன். அதன் முதுகில் நான் பயணம் செய்கின்றேன்.

அதற்கு சஹாபாக்கள், யா ரஸூலல்லாஹ்! தாங்கள் இந்த கனவிற்கு என்ன விளக்கம் அளித்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மாடு அறுக்கப்படுவது என்பது, எனது சஹாபாக்களில் சிலர் ஷஹீதாவார்கள் என்று நான் கருதுகின்றேன். எனது வாளின் முனை உடைந்து விடுவது என்பது எனது அன்பிற்குரியவர்களில் எவராவது ஷஹாதத் ஏற்படும் என்பதன் பக்கம் சுட்டிக் காட்டுகிறது. அல்லது எனக்கு இந்தத் திட்டத்தில் ஏதாவது கஷ்டம் ஏற்படலாம். மேலும் எனது கையைக் கவசத்திற்குள் வைப்பது என்பது இந்த தாக்குதலை எதிர் கொள்வதற்கு நாம் மதீனாவில் இருப்பதே மிகச் சிறந்தது என்று நான் கருதுகின்றேன். மேலும் செம்மறி ஆட்டின்மீது பயணம் செய்வது தொடர்பான கனவிற்கு அன்னார் இவ்வாறு விளக்கம் அளித்தார்கள்: அதாவது இது இணை வைப்பவர்களின் தலைவர் இன்ஷா அல்லாஹ் முஸ்லிம்களின் கைகளால் கொல்லப்படுவார்.

இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் தற்போதைய நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை கேட்டார்கள். சில பெரிய சஹாபாக்கள் நிலைமைகளை கருத்தில் கொண்டவாறு நன்கு சிந்தித்து, ஒரு குறிப்பிட்ட அளவு பெருமானார் (ஸல்) அவர்களின் கனவின் தாக்கத்திற்கு ஆளாகியவாறு, மதீனாவில் இருந்தவாறே நாம் எதிர்கொள்வது சிறந்ததாகும் என்று கூறினார்கள். நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூலும் இந்த கருத்தையே கொண்டிருந்தார். அவனும் பெருமானார் (ஸல்) அவர்களும் இந்தக் கருத்தையே விரும்பினார்கள். மேலும் கூறினார்கள்: இதிலிருந்து நாம் மதீனாவிலிருந்து போரை எதிர்கொள்வோம் என்பது தெரிய வருகின்றது. ஆனால் பெரும்பான்மையான சஹாபாக்கள் குறிப்பாக பத்ர் போரில் கலந்து கொள்ளாத இளைஞர்கள் தாம் ஷஹீதாகி மார்க்கத்திற்கு தொண்டு செய்வதற்கான சந்தர்ப்பத்தை அடைய விரும்பினர். அவர்கள் மிகவும் ஏங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் கூறினர்: நகரத்திலிருந்து வெளியேறி பரந்த மைதானத்தில் நாம் போர் செய்ய வேண்டும் என்று கூறினர்.

அவர்கள் எந்த அளவுக்கு அழுத்தமாகத் தமது கருத்தை தெரிவித்தனர் என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களது ஆர்வத்தைக் கண்டவாறு அவர்களது கூற்றை ஏற்றார்கள். மேலும் பரந்த மைதானத்தில் நிராகரிப்பவர்களை எதிர்கொள்வோம் என்று முடிவெடுத்தார்கள்.

பிறகு ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம், அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வதற்காக இந்தப் போரில் கலந்து கொண்டு நற்கூலியைப் பெறுமாறு பொதுவான அறிவிப்பைச் செய்தார்கள். பிறகு அன்னார் தமது வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர் அவர்களின் உதவியுடன் தலைப்பாகையைக் கட்டினார்கள். ஆடையை அணிந்தார்கள்.

பிறகு ஆயுதங்களை ஏந்தியவாறு அல்லாஹ்வின் பெயரால் வெளியே வந்தார்கள். ஆனால் இந்த இடைப்பட்ட நேரத்திற்குள் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅது பின் மஆஸ் அவர்கள் மற்றும் மற்ற பெரிய சஹாபாக்கள் இளைஞர்களுக்கு புரிய வைத்ததன் காரணமாக அவர்களுக்கு தமது தவறுக்கான உணர்வு ஏற்பட்டது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்களது கருத்துக்கு எதிரில் தமது கருத்திற்கு அழுத்தம் கொடுக்கக்கூடாது. எனவே இவர்களில் பெரும்பான்மையினர் வெட்கத்திற்கு ஆளாகினர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஆயுதங்களை அணிந்து கொண்டு மற்றும் இதர போர் கவசங்களை அணிந்து கொண்டு வெளியே வருவதைக்கண்ட இந்த மக்களுக்கு மேலும் தலைகுனிவு அதிகமாக ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ்! நாங்கள் தவறிழைத்து விட்டோம். நாங்கள் உங்களது கருத்திற்கு எதிராக எங்களது கருத்திற்கு அழுத்தம் கொடுத்து விட்டோம் என்று கூறினர். நீங்கள் எவ்வாறு எண்ணுகின்றீர்களோ அவ்வாறே செய்யுங்கள். இன்ஷா அல்லாஹ் அதில்தான் பரக்க இருக்கும் என்று கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: ஆயுதங்களை அணிந்த பிறகு அல்லாஹ்வின் கட்டளையில்லாமல் அதை கழற்றுவது என்பது இறைவனது நபிமார்களின் கண்ணியத்திற்கு எதிரானதாகும். எனவே இப்போது அல்லாஹ்வின் பெயரால் செல்லுங்கள். நீங்கள் பொறுமையுடன் செயல்பட்டால் பிறகு நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் உதவி உங்களுடன் இருக்கும்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும், உங்களுடைய அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். பின்னர் உங்களுக்குள் ஏதாவது ஒன்றில் தர்க்கம் ஏற்பட்டால் நீங்கள் அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும் நம்பிக்கை கொண்டவர்களாயின் அதனை அல்லாஹ்விடமும் இத்தூதரிடமும் கொண்டு செல்லுங்கள். (4:60)

A.Basheer Ahmad, Melapalayam

இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய படைக்கு மூன்று கொடிகளைத் தயார் செய்தார்கள். அவ்ஸ் கோத்திரத்தின் கொடியை உஸைது பின் ஹுஸைர் அவர்களிடம் கொடுத்தார்கள். ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கொடியை குப்பாப் பின் முன்ஸிர் அவர்களின் கையில் கொடுத்தார்கள். மேலும் முஹாஜிரீன்களின் கொடியை ஹஸ்ரத் அலி அவர்களுக்கு கொடுத்தார்கள். பிறகு மதீனாவிற்கு அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் அவர்களை இமாமுஸ் சலாத்தாக நியமித்தவாறு சஹாபாக்களின் ஒரு படையை தம்முடன் அழைத்துக் கொண்டு அஸர் தொழுகைக்குப் பிறகு மதீனாவிலிருந்து வெளியேறினார்கள்.

அவ்ஸ் கோத்திரம் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர்களான சஅது பின் முஆஸ் மற்றும் சஅது பின் உபாதா ஆகியோர் அன்னாரது பயண வாகனத்திற்கு முன்பாக மெது மெதுவாக ஓடி வந்தனர். மற்ற சஹாபாக்கள் வலப் பக்கமும், இடப் பக்கமும், பின்னாலும் நடந்து வந்தனர். உஹது மலை மதீனாவின் வடக்குப் பகுதியிலிருந்து ஏறக்குறைய 3 மைல் தொலைவில் உள்ளது. அதன் பாதி பகுதியை அடைந்ததும் ஷேஹைன் என்ற இடத்தில் அன்னார் தங்கினார்கள். இது மதீனாவிற்கு அருகில் இருக்கின்ற ஓர் இடமாகும்.

மேலும் இஸ்லாமிய படையை ஆய்வு செய்வதற்காக கட்டளையிட்டார்கள். இதில் ஜிஹாதில் பங்கு பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் கலந்து கொண்ட குறைந்த வயதை உடையவர்கள் திரும்பி அனுப்பப்பட்டார்கள். அப்துல்லாஹ் பின் அம்ர், உஸாமா பின் ஸைது, அபூ சயீது குத்ரீ ஆகியோர் திருப்பி அனுப்பப்பட்டனர். ராஃபி பின் குதைஜ் இந்த இளைஞர்களின் வயதை உடையவராகவே இருந்தார்கள். ஆனால் அம்பு எய்யும் திறமை கொண்டவராக இருந்தார்கள்.

இவர்களது திறமையின் காரணமாக அவர்களது தந்தை பெருமானார் (ஸல்) அவர்களிடம், இவனை ஜிஹாதில் கலந்து கொள்வதற்கு அனுமதி தரும்படி பரிந்துரை செய்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் ராஃபியைப் பார்த்தபோது, அவர் போர் வீரனைப் போன்று நின்று கொண்டிருந்தார். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவனையும் தம்முடன் வருவதற்கான அனுமதியை வழங்கினார்கள்.

இன்னொரு சிறுவன் சம்ரா பின் ஜன்தபை பெருமானார் (ஸல்) அவர்கள் திருப்பி அனுப்பியிருந்தார்கள். அவர் தமது தந்தையிடம் சென்று, ராஃபி தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டான். எனவே எனக்கும் அனுமதி கிடைக்க வேண்டும். ஏனென்றால் ராஃபியை விட நான் வலிமையானவன் ஆவேன். மல்யுத்தத்தில் நான் அவனை வீழ்த்தி விடுவேன் என்று கூறினார்.

மகனின் கலப்பற்றத் தன்மையைக் கண்ட தந்தைக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அவனை அழைத்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். தமது மகனின் விருப்பத்தை தெரிவித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சிரித்தவாறு கூறினார்கள்: நல்லது. இதுதான் விஷயம் என்றால் பிறகு ராஃபி மற்றும் சம்ரா ஆகிய இருவருக்கும் மல்யுத்தம் நடத்துவோம். இதன் மூலம் யார் வலிமையானவர் என்பது தெரிய வரும் என்று கூறினார்கள். எனவே இருவருக்குமிடையே போட்டி நடைபெற்றது. உண்மையிலேயே சம்ரா சிறிது நேரத்திலேயே ராஃபியை தூக்கி கீழே எறிந்து விட்டார். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் சம்ராவை தம்முடன் செல்வதற்கான அனுமதியை வழங்கினார்கள். இந்த குழந்தையின் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது. இப்போது மாலைப்பொழுதாக இருந்தது.

எனவே பிலால் அவர்கள் பாங்கு சொன்னார்கள். பிறகு சஹாபாக்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் தலைமையில் தொழுதார்கள். பிறகு இரவில் முஸ்லிம்கள் இங்கு முகாமிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இரவில் பாதுகாப்பு வழங்குவதற்காக முஹம்மது பின் முஸ்லிமாவை கண்காணிப்பாளராக நியமித்தார்கள். அவர்களும் 50 சஹாபாக்களும் இணைந்து இரவு முழுவதும் இஸ்லாமிய படையைச் சுற்றி சுற்றி வந்தவாறு பாதுகாப்பு வழங்கினர்.

அடுத்த நாள் அதாவது ஷவ்வால் 15 ஆம் தேதி ஹிஜ்ரி 3, 31 மார்ச் 624 அதாவது சனிக்கிழமையன்று சஹ்ரி நேரத்தில் இந்த இஸ்லாமிய படை முன்னேறிச் சென்றது. வழியில் அவர்கள் தொழுதார்கள். காலைப் பொழுதிலேயே இவர்கள் உஹது மைதானத்தை சென்றடைந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தின்போது நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் அபி பின் சலூல் ஏமாற்று வேலை செய்தான். மேலும் தமது 300 நபர்களுடன் முஸ்லிம் படையை விட்டு விலகியவாறு, முஹம்மது (ஸல்) அவர்கள் எனது பேச்சைக் கேட்கவில்லை. அனுபவமற்ற இளைஞர்களின் பேச்சைக் கேட்டு வெளியேறி வந்துள்ளார்கள். எனவே என்னால் இவர்களுடன் இணைந்து போர் செய்ய முடியாது என்று கூறியவாறு மதீனாவிற்கு திரும்பிச் சென்று விட்டான்.

சில மக்கள் இது ஏமாற்று வேலையாகும்; இது சரியல்ல என்று அவனுக்கு புரிய வைத்தனர். அவன் அவன் எதையும் கேட்கவில்லை. மேலும், இது சண்டையா என்ன? சண்டையாக இருந்திருக்குமென்றால் நானும் பங்கு பெற்றிருப்பேன். ஆனால் இது சண்டையல்ல. மாறாக, இது சுயமே அழிவில் தாமே சென்று விழுவதாகும் என்று கூறினான்.

இப்போது முஸ்லிம்கள் ஆற்றல் வெறும் 700 நபர்களைக் கொண்டதாகவே இருந்தது. ஆனால் நிராகரிப்பவர்களின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது. முஸ்லிம்களின் எண்ணிக்கை 1/4 ஐ விட குறைவாகவே இருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 484–487)

எவ்வாறாயினும் போர் நடைபெற்றது. இதைப் பற்றிய நிலைகள் தொடர்பாக இன்ஷா அல்லாஹ் வரக்கூடிய குத்பாவில் எடுத்துக் கூறுவேன்.

இப்போது நான் ஒரு மர்ஹூமைப் பற்றி எடுத்துக் கூற விரும்புகின்றேன். தொழுகைக்குப் பிறகு அவர்களது ஜனாஸாவை தொழ வைப்பேன். அது மவ்லானாக மர்ஹூம் கமருத்தீன் சாஹிப் அவர்களின் மகனாகிய மதிப்பிற்குரிய காஜா ரஷீதுத்தீன் கமர் சாஹிப் அவர்களுடையதாகும். அக்டோபர் 10 அன்று தமது 86 வது வயதில் அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அன்னார் 1933 ஆம் ஆண்டு காதியானில் பிறந்தார்கள். நான் கூறியது போன்று அன்னார் கமருத்தீன் சாஹிப் அவர்களது மகனாவார்கள். மவ்லவி கமருத்தின் சாஹிப் அவர்களை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களை குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முதல் சதரான நியமித்தார்கள். மர்ஹூம் ஹஸ்ரத் மியான்

**திருக்குர்ஆனிலிருந்து...**

தனக்கு இணை வைப்பதை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். இ(ந்தப் பாவத்)தை விடக் குறைந்ததை, தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு (எதையாவது) இணை வைப்பவன், மாபெரும் பாவத்தை உருவாக்கிக் கொண்டான். (4:49)

M.Y. Shahul Hameed, Melapalayam

ஹைருத்தீன் சாஹிப் சீக்வானி (ரலி) அவர்களின் பேரன் ஆவார்கள். மேலும் மதிப்பிற்குரிய நமது யூகேவின் அமீர் சாஹிபின் மாமா ஆவார்கள். ஹஸ்ரத் மியான் ஹைருத்தீன் சீக்வானீ மற்றும் அவர்களது இரண்டு சகோதரர்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அஞ்சாமே ஆத்தம் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

நான் எனது ஜமாஅத்தின் அன்பு மற்றும் கலப்பற்றத்தன்மையைக் கண்டு வியப்படைகின்றேன். அதாவது இவர்களில் மிகவும் குறைந்த வருமானத்தை உடைய மியான் ஜமாலுத்தீன், கைருத்தீன் மற்றும் இமாமுத்தீன் காஷ்மீரி ஆகியோர் எனது ஊருக்கு மிக அருகில் வசிக்கக் கூடியவர்கள் ஆவர். இந்த மூன்று ஏழை சகோதரர்களும் பணி செய்து தினமும் மூன்று அல்லது நான்கு அனாக்களை சம்பாதிக்கின்றனர். ஆனால் அவர்கள் மாதாந்திர சந்தாவை முறையாக செலுத்துகின்றனர்.

(அன்ஜாமே ஆத்தம், ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 313)

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் சந்தா செலுத்துமாறு எடுத்துக் கூறினார்கள். எனவே இவர்கள் சந்தா செலுத்தினர். இதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

இவர்களின் சந்தாவின் விவகாரம் மிகவும் வியக்கத்தக்கதும், பொறாமை கொள்ளத்தக்கதும் ஆகும். அதாவது அவர்கள் உலக செல்வத்தில் மிக குறைவான பங்கையே வைத்துள்ளனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்று வீட்டில் இருந்த அனைத்தையும் கொண்டு வந்து விட்டனர். மேலும் பைஅத்தின் நிபந்தனைகளைப் போன்று உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ளனர்.

ஆக காஜா சாஹிப் அவர்களும் இவர்களது சந்ததியே ஆவார்கள். மர்ஹூம் பாகிஸ்தான் ஹிஜ்ரத் செய்யப்பட்ட பிறகு சில காலம் பாகிஸ்தான் ஏர் ஃபோர்ஸில் பணியாற்றினார்கள். 1958 ஆம் ஆண்டு யூகே வந்தார்கள். இங்கு 33 வருடங்கள் வரை பிரிட்டிஷ் ஏர்வேஸில் வேலை பார்த்தார்கள். அன்னாருக்கு தொண்டு செய்வதற்கான ஆர்வம் மிகுதியாக இருந்தது.

எனவே அன்னார் வேலை செய்யும்போதே பணியை இரவு நேரத்தில் வைத்திருந்தார்கள். ஏனென்றால் பகல் நேரத்தில் மார்க்கத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்பதற்காக. ஏறக்குறைய முழு வாழ்நாளையும் இயக்கத்திற்கு தொண்டாற்றுவதிலேயே கழித்தார்கள். ஜமாஅத்தின் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்கள்.

யூகே குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முதல் காயிதாக தொண்டாற்றும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்தது. அந்த காலத்தில் வெளியிலுள்ள குத்தாமுல் அஹ்மதிய்யாவும் தலைமையகத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருந்தது. இத்துடன் தேசிய ஜெனரல் செகரட்டரியாகவும், பிறகு செகரட்டரி மாலாகவும், பிறகு செகரட்டரி ரிஷ்தா நாதாவாகவும், பிறகு செகரட்டரி உமூரே ஆமாவாகவும், நாயிப் அஃப்ஸர் ஜலஸா ஸலானாவாகவும் தொண்டு செய்யும் நற்பாக்கியத்தை அன்னார் பெற்றுள்ளார்கள்.

காஜா சாஹிப் எண்ணற்ற நற்பண்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். கிலாஃபத்தின் மீது அளப்பற்ற அன்பு கொண்டிருந்தார். மார்க்க பெரியோர்கள், முரப்பிகள் மற்றும் ஜமாஅத்தின் பொறுப்பாளர்களுக்கு அதிகமாக கண்ணியம் கொடுத்து வந்தார்கள். மிகச்சிறந்த நல்ல மனிதர் ஆவார். தஹஜ்ஜுத் தொழக் கூடியவர். ஜமாஅத்தாக தொழுவதை முறையாக பேணுபவர்; சந்தா மற்றும் சதகாக்களை முறையாக வழங்குபவர்; ஏழை குழந்தைகளுடன் மிகவும் பரிவுடன் நடந்து கொள்ளக்கூடியவர் ஆவார். சந்திக்கக்கூடிய ஒவ்வொரு பெரிய மற்றும் சிறியவருடனும் கண்ணியத்துடன் நடந்து கொள்பவர் ஆவார். மர்ஹூம் மூஸி ஆவார்.

அல்லாஹ்வின் அருளால் தமக்குப் பிறகு மனைவியையும், ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்களையும், மூன்று சகோதரர்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரது ஒரு பேரன் காஸிது முயீன் முரப்பி ஆவார்கள். தற்போது MTA விலும், அல் ஹகமிலும் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றார்.

காஸிது முயீன் சாஹிப் கூறுகின்றார்கள்: நாங்கள் சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களை எங்களது பாட்டனாரின் வீட்டில் கழிப்போம். ஒவ்வொரு வாரமும் அவர்களை அருகில் இருந்து பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நான் குழந்தைப் பருவத்தில் அவர்களது அறையில் தான் தூங்குவேன். பெரும்பாலும் நான் அவர்களை நவாஃபில் தொழுது விட்டு தூங்குவதையே கண்டுள்ளேன். அந்த நவாஃபிலும் கூட மிக அழகாகவும், நீண்டதாகவும் தொழுவார்கள். மேலும் காலையில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுவார்கள். ஃபஜ்ர் தொழுகைக்காக எங்களை எழுப்புவார்கள்.

மேலும் இவர்கள் எழுதுகின்றார்கள்: நான் எப்போதும் இவர்களை மென்மையான உள்ளத்தைக் கொண்டவராகவே கண்டுள்ளேன். வானவர்களைப் போன்ற இயல்பைக் கொண்டவர் ஆவார்கள். ஒருபோதும் எங்களை திட்டியது கிடையாது.

ஒரு முறை மட்டும் என்னைத் திட்டியுள்ளார்கள். அதுவும் கூட ஒரு முறை நான் நான்காவது கிலாஃபத் காலகட்டத்தில் எனது அறியாமையின் காரணமாக நான் அவர்களிடம், அடுத்த கலீஃபா யார்? என்று கேட்டேன். எனவே எனது பாட்டனார் என்னை மிகவும் திட்டினார்கள். மேலும் இப்படிப்பட்ட கூற்றுகளைப் பேசக்கூடாது என்றும் புரிய வைத்தார்கள். இதன் மூலம் சிறிய வயதிலேயே கிலாஃபத்தின் அந்தஸ்து தொடர்பாக எனக்குத் தெரிய வந்தது.

எவ்வாறிருப்பினும் கிலாஃபத்தின் மீது அளவு கடந்த பற்றுணர்வு கொண்டவர். தொடர்ச்சியாக எனக்கு கடிதம் எழுதி வந்தார்கள். தமது இறுதி நோயின் நாட்களிலும், இங்கு சுற்றுப் பயணத்திற்கு முன்பாக சில நாட்களுக்கு முன் என்னை சந்திப்பதற்காக வந்தார்கள். கேன்ஸர் நோய் இருந்தது. மிகவும் பொறுமையுடன் இதனைப் பொறுத்துக் கொண்டார்கள். மிகவும் துன்பத்தைத் தரக்கூடிய சிகிச்சையுமாகும்.

மேலும் துன்பத்தைத் தரக்கூடிய நோயுமாகும். ஆனால் மிகவும் பொறுமையுடன் இதனை சகித்துக் கொண்டார்கள். மேலும் மிக தைரியத்துடன் அனைத்து விஷயங்களையும் கூறினார்கள். அல்லாஹ் இவர்களுடன் மஃபிரத் மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் தனது அன்பிற்குரியவர்களின் இடத்தில் இடமளிப்பானாக. மேலும் இவர்களது சந்ததிகளுக்கும் இவர்களது நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

## திருக்குர்ஆனிலிருந்து...

உம்முடைய இறைவன் மீது ஆணையாக! அவர்கள் தங்களுக்கிடையில் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றவற்றில் உம்மை நீதிபதியாக ஆக்கி, பின்னர் நீர் வழங்குகின்ற தீர்ப்பினை (தம்) உள்ளங்களில் எவ்வித தயக்கத்தையும் காட்டாமல் ஏற்று, முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்காதவரை அவர்கள் ஒருபோதும் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள். (4:66)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 21 November 2019 Issue No. 47

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஈமானை வலுப்படுத்துவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் இறைவனின் இருப்பை மக்களுக்கு நிரூபித்துக் காட்டுவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்

ஈமானை வலுப்படுத்துவதற்காகவும், இறைவனின் இருப்பை மக்களுக்கு நிரூபித்துக் காட்டுவதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். ஏனென்றால், ஒவ்வொரு சமுதாயத்தின் ஈமானின் நிலைமைகள் மிகவும் பலகீனமானதாக ஆகிவிட்டது. மறுஉலகம் என்பது ஒரு கதையாக மட்டுமே கருதப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் தனது செயல் அளவிலான நிலைமை மூலமாக அவன் எந்த அளவு உலகம் மற்றும் உலகின் தகுதிகள் மீது உறுதி கொள்கின்றானோ, எந்த அளவுக்கு உலக காரணிகள் மீது நம்பிக்கை இருக்கின்றதோ அதே போன்ற உறுதியும், நம்பிக்கையும் அவனுக்கு இறைவன் மீதும் மறு உலகத்தின் மீதும் ஒருபோதும் இல்லை. நாவுகளில் பல விஷயங்கள் கூறப்படுகின்றது. ஆனால் உள்ளங்களில் உலகின் மீதுள்ள நேசம் மிகைத்து நிற்கின்றது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் இதே நிலையில் தான் யூதர்கள் இருந்ததைக் கண்டார்கள். குறிப்பாக ஈமானில் பலவீனம் காணப்படுவதைப் போன்றே யூதர்களின் ஒழுக்க நிலைமையும் கூட மிகவும் மோசமானதாக ஆகிவிட்டது. இறைவன் மீதுள்ள அன்பு குளிர்ந்து விட்டது.

இப்போது எனது காலத்திலும் கூட இதே நிலைமை தான் இருக்கின்றது. உண்மை மற்றும் ஈமானின் காலகட்டம் மீண்டும் வர வேண்டும் என்பதற்காகவும், உள்ளங்களில் தக்வா உருவாக வேண்டும் என்பதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே, இந்த பணிகளே எனது வருகையின் மகத்தான நோக்கமாகும். மிகவும் தொலைவில் சென்று விட்ட பிறகு மீண்டும் வானம் பூமிக்கு அருகில் வந்து விடும் என்று எனக்கு கூறப்பட்டிருக்கின்றது. எனவே, இந்த விஷயங்களை சீர்திருத்துபவனாகவே நான் இருக்கின்றேன். இந்த பணிகளை செய்வதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். **(கிதாபுல் பரிய்யா பக்கம் 291 ரூஹானி கஸாயின் தொகுதி 13)**

## நமது ஜமாஅத்தை சாராதவர்களுக்குப் பின்னால் நின்று தொழ வேண்டாம்

நமது ஜமாஅத்தை சாராதவர்களுக்குப் பின்னால் நின்று தொழாமல் இருப்பது பற்றிய பேச்சு வந்தது. அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ''பொறுமையை கடைபிடியுங்கள். நமது ஜமாஅத்தை சாராதவர்களுக்கு பின்னால் நின்று தொழாதீர்கள். சிறப்பும் நன்மையும் இதில்தான் இருக்கின்றது. இதில்தான் இறை உதவி கிடைப்பதும் மகத்தான வெற்றியும் இருக்கின்றது. இதுவே இந்த ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கின்றது. பாருங்கள்! உலகில் முகந்திருப்பிச் செல்லக்கூடியவர்களும் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது வெறுப்படைந்திருப்பவர்களும் கூட தமது எதிரிகளிடம் பல நாட்கள் வரை பேசாமல் இருக்கின்றனர். உங்களது வெறுப்பும் முகந்திருப்பிச் செல்வதும் இறைவனுக்காகவே இருக்கின்றது. நீங்கள் அவர்களுடன் சேர்ந்து இருந்து விட்டால் உங்கள் மீது குறிப்பான பார்வை வைத்திருக்கும் இறைவன் அவ்வாறு வைக்காமல் இருந்து விடுவான். தூய ஜமாஅத் தனியாகப் பிரிந்து செல்லும்போது தான் அதில் முன்னேற்றம் ஏற்படுகின்றது.''

**(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 321, 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)**

எந்த மக்கள் உங்களது சீடராக இல்லையோ அவர்களுக்கு பின்னால் நின்று தொழுவதற்கு நீங்கள் உங்களது சீடர்களுக்கு ஏன் தடை விதித்துள்ளீர்கள்? என்று ஒருவர் கேள்வி கேட்டார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: ''எந்த மக்கள் அவசரத்துடன் தவறான எண்ணம் கொண்டவாறு அல்லாஹ் நிறுவியுள்ள இந்த ஜமாஅத்தை மறுத்து விட்டனரோ அவர்களும், எவர்கள் இந்த அளவு அடையாளங்கள் வெளிப்பட்டும் அவற்றை பொருட்படுத்தாமல் இருக்கின்றனரோ, மேலும் இஸ்லாத்தின் மீது ஏற்பட்டுள்ள துன்பங்களையும் பொருட்படுத்தாமல் இருக்கின்றனரோ அந்த மக்கள் தக்வாவுடன் நடந்து கொள்ளவில்லை. அல்லாஹ் தனது தூய மறையில், இறையச்சம் உள்ளவர்களது துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றான் **(5:28)** என்று கூறுகின்றான். இறைவன் இறையச்சமுள்ள மக்களது துஆக்களை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றான். எனவேதான், எந்த மனிதரது தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தகுதியைப் பெறாதோ அவருக்கு பின்னால் தொழ வேண்டாம் என்று கூறப்பட்டிருக்கின்றது.''

**(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 215, 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)**

## தினமும் இரண்டு ரக்அத் நஃபில் தொழ வேண்டும் என்ற வேண்டுகோள்!

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள் 3 டிசம்பர் 2010 –ல் நிகழ்த்திய ஜுமுஆ பேருரையில் அஹ்மதி சகோதரர்கள் தினமும் இரண்டு ரக்அத் நஃபில் தொழ வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

இந்த நிலைமைகளில் உலகம் முழுவதும் உள்ள ஜமாஅத்துகளிலுள்ள எல்லா நபர்களிடமும் அவர்கள் குறிப்பாக அநீதிக்கு ஆளாகியிருக்கும் துன்பங்களிலும் துயரங்களிலும் சிக்கியிருக்கின்ற தமது சகோதரர்களுக்காக துஆக்கள் செய்ய வேண்டும் என்று நான் கவனமூட்ட விரும்புகின்றேன். அஹ்மதிய்யத்தின் காரணமாக ஏதாவது ஒரு வகையிலான துன்பத்தில் ஆழ்ந்திருக்கின்ற அநியாயமான சட்டங்களின் காரணமாக தமது குடியுரிமையிலிருந்தும் மார்க்க சுதந்திரத்திலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டுள்ள அந்த மக்களுக்காக மட்டும் ஒவ்வொரு அஹ்மதியும் தினந்தோறும் குறைந்தபட்சம் இரண்டு ரக்அத் நஃபில் தொழுகையை தொழ வேண்டும். இவ்வாறே ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகவும் குறிப்பாக துஆக்களைச் செய்யுங்கள்.

எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் தனது உள்ளத்திலுள்ள அமைதியற்ற நிலையை இறைவன் முன்னிலையில் எடுத்து வைப்பாரென்றால் அல்லாஹ்வின் அன்பின் பார்வை அவர் மீது எப்படி படுகின்றது என்பதை அவர் தாமே கண்டு கொள்வார். முன்னரை விட அதிகமாக அல்லாஹ் அவர்களைத் தனது கோட்டைக்குள் எடுத்துக் கொள்வான். **(அல் ஃபஸ்ல் நாளிதழ் 18 ஜனவரி 2011)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad